**BRITISH TAMILS FORUM**

**WORKING TOGETHER FOR PEACE WITH JUSTICE AND DIGNITY**

**செய்தியறிக்கை - உடனடி வெளியீட்டிற்கானது**

கோத்தபாயவுடனான சந்திப்பு – பிரித்தானிய தமிழர் பேரவை மறுப்பு

சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்சவை பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர் மருத்துவர் அருட்குமார் சந்தித்துப் பேசியதாக, பிரித்தானியாவில் இருந்து ஒளிபரப்பாகும் ஜி.ரி.வி தொலைக்காட்சி வெளியிட்ட செய்திக்கு, பிரித்தானிய தமிழர் பேரவை மறுப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த சனி, ஞாயிறு (26,27-06-2010) தினங்களில் ஒளிபரப்பான ஜி.ரி.வி செய்திகளில் பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர் மருத்துவர் அருட்குமார் கோத்தபாயவைச் சந்தித்ததாகக் கூறப்பட்டது. ஆனால் மருத்துவர் அருட்குமார் சிறீலங்காவிற்கு மேற்கொண்ட பயணம் தனிப்பட்டது எனவும், அவரது பயணம் பற்றியோ, அன்றி கோத்தபாயவைச் சந்திப்பது தொடர்பாகவோ அவர் பிரித்தானிய தமிழர் பேரவையிடம் அனுமதி பெற்றிருக்கவில்லை என்பதையும், எமது பிரதிநிதியாக அவர் அந்த சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதையும் இந்த இடத்தில் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக ஆராய ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய தமிழர் பேரவையின் கூட்டம் இடம்பெற இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டதிலும் எந்தவித உண்மையும் இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றோம். நேற்று (27-06-2010) இடம்பெற்ற கூட்டம் பிரித்தானிய தமிழர் பேரவையின் எதிர்கால பரப்புரைச் செயற்பாடுகள் பற்றிய பட்டறை என்பதும், இது ஒரு மாதத்திற்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு இடம்பெற்றதுடன், பிரித்தானியாவின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து பலர் கலந்துகொண்டனர் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் இவ்வாறான தகவல்கள் மக்களைச் சென்றடைந்து குழப்பம் ஏற்படுவதற்கு முன்னர், பிரித்தானிய தமிழர் பேரவை பற்றிய செய்திகளை எதிர்காலத்தில் ஒளிபரப்ப முன்னர் அதனது உண்மைத்தன்மையை எம்மைத் தொடர்புகொண்டு கேட்டறியுமாறு ஜி.ரி.வி நிறுவனத்தை தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**For media queries please contact:**
**Tel:** +44 (0) 20 8808 3224
**Email:** media@tamilsforum.com

**Notes to Editors:**
**British Tamils Forum** exists to harness the skills and the knowledge of the members of the forum, well-wishers and significant others including mainstream decision makers in the UK with the aim of alleviating the sufferings of the Tamils community in the Island of Sri Lanka and to further their right to self-determination within a democratic frame work underpinned by international law, its covenants and conventions. For more information admin@tamilsforum.comand/or visit: www.tamilsforum.com